பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

19 02 2025 **WEDNESDAY** 6 30 **PM**

1. சிவில் விமான போக்குவரத்துத்துறை இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. மக்களுக்கு தகவல்களை வழங்குவதில் ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

3. மகளிர் கல்வியில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் தொடர்வது கண்டனத்திற்குரியது என்று அஇஅதிமுக, பிஜேபி மற்றும் பாமக கூறியுள்ளன.

5. ஆசிய கோப்பை வில்வித்தைப் போட்டியின் ஆடவர் குழுப் பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

சிவில் விமான போக்குவரத்துத்துறை இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

பிரயாக்ராஜில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த பத்தாண்டுகளில் இந்த துறையின் வளர்ச்சிக்காக பெரிய அளவில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.

உலக அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>>><<<<<<

பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவதில் ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் முக்கியப் பங்கு வகிப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

இன்று கோரக்பூரில் ஆகாஷ்வானி மற்றும் தூர்தர்ஷன் செயல்பாடுகள் குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

நிகழ்ச்சிகள் மாநில மொழிகளில் ஒலிபரப்பப்பட வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

மகளிர் கல்வியில் தமிழகம் முன்னணியில் உள்ளதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி செழியன் கூறியுள்ளார்.

தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மாநில அரசின் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி அவர் பேசினார்.

மகளிர் மேம்பாட்டிற்காக தமிழக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

பெண்களின் பாதுகாவலராக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் திகழ்வதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>>><<<<<<

பெண்களுக்கான பாதுகாப்பை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் விடுத்துள்ள அறிக்கையில், நேற்று ஒரே நாளில் 12 பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் நடைபெற்றதாக வெளியான செய்திகளை சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழக வரலாற்றில் இதுபோன்ற கறுப்பு நாட்கள் தொடர் கதையாவது வருத்தத்திற்கும், கண்டனத்திற்கும் உரியது என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

பாலியல் குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கத் தவறியதே இதற்கு காரணம் என்று திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

பள்ளி மாணவிகளை பாதுகாப்பதில் திமுக அரசு முற்றிலும் தோல்வியடைந்துள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில் இதனை தெரிவித்துள்ள அவர், புதுக்கோட்டை மாவட்ட அரசு பள்ளியில் ஏழு மாணவிகள் பாலியல் தொல்லைக்கு உட்படுத்தப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்த போதிலும், அவற்றை தடுக்க உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதவி விலக வேண்டும் என்றும் திரு. அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கவும், பெண்கள் பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் நடமாடுவதை உறுதி செய்யவும் தேவையான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் நாள்தோறும் நடைபெறுவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

>>>>>><<<<<<

காசி தமிழ் சங்கமத்தில் பங்கேற்றுள்ளவர்கள் தங்களது அனுபவங்களை தங்கள் ஊரில் உள்ள பிறரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று சென்னை ஐஐடி இயக்குநர் திரு. காமகோடி கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட்- காமகோடி 49 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, காசி தமிழ் சங்கமத்தில் பங்கேற்றுள்ள தமிழகத்தைச் சேர்ந்த தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழில் முனைவோர் அடங்கிய குழுவினர் இன்று ஹனுமன் படித்துறையில் புனித நீராடினர்.

>>>>>><<<<<<

‘எனது பாரதம்’ இயக்கத்தின் மூலம் வேலூர் மாவட்டத்தில் இளையோர் சுற்றுப்புற தூய்மை குறித்தும், அரசு திட்டங்கள் குறித்தும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இதில் 50க்கும் மேற்பட்டோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - மோகன் 43 செகண்ட்ஸ்)

குப்பைகளை தரம் பிரிப்பது போன்றவை குறித்து தாங்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தியதாக இதில் பங்கேற்ற ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - தன்னார்வலர் 44 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு வழங்கும் ‘செய்திச்சுடர்’ நிகழ்ச்சியில், ‘புத்தொழில் இந்தியா இயக்கம்’ குறித்து மூத்த பத்திரிகையாளர் திரு. வெங்கடேஷுடன் எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணல் இன்று இடம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

நாமக்கல் மாவட்டத்தில் அரசு திட்டங்களின் செயலாக்கம் குறித்து ஆட்சியர் திருமதி. உமா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<<

கோவில்பட்டி அருகே காரில் கடத்தி வரப்பட்ட 900 கிலோ ரேஷன் அரிசியை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

>>>>>><<<<<<

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் உள்ள ராஜகோபால சுவாமி கலைக்கல்லூரியில் போதை பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆட்சியர் திரு. மோகனசந்திரன் தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

தூத்துக்குடி மாவட்டம், வடக்கு காரசேரியில் உள்ள வேளாண் விற்பனை ஒழுங்குமுறை கூடத்தில் ஆட்சியர் திரு. இளம்பகவத் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<<

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரியில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாமினை ஆட்சியர் திருமதி. ஆஷா அஜித் தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய கோப்பை வில்வித்தைப் போட்டியில், இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் குழுப் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 234-231 என்ற புள்ளிக்கணக்கில் கஜகஸ்தானை வீழ்த்தியது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் மிஸ்ரா மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், 6-0 என்ற புள்ளிகணக்கில் குவைத்தின் **Aly Alzaid**-ஐ வென்றார்.

**>>>>>><<<<<<**

சீனாவில் இன்று தொடங்கிய ஆசிய கோப்பை டேபிள் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீஜா அகுலா முதலாவது ஆட்டத்தில் வெற்றி பெற்றார்.

இப்போட்டியில் 11-7, 11-5, 11-4 என்ற செட்கணக்கில் கத்தாரின் **Aia Mohammed**-ஐ வென்றார்.

**>>>>>><<<<<<**

புனே சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - சாகேத் மைனேனி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>>> <<<<<<**